www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06

நக.எண்: 072841/சி3/இ2/2024, நாள்: 07.11.2024

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி – பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர்களைக் கொண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின்கீழ் உள்ள போதக காப்பாளர் / காப்பாளினி மற்றும் இடைநிலை காப்பாளர் / காப்பாளினி பணியிடங்களை நிரப்புதல் – விருப்பமுள்ள ஆசிரியர்களின் விவரங்கள் கோருதல் - சார்பாக.

பார்வை: ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அவர்களின் கடிதம், ந.க.எண்.பி3/4868/2012, நாள்.23.09.2024

******

பார்வையில் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் **நலத்துறையின்கீழுள்ள 1351 விடுதிகளில் தற்போது 497 காப்பாளர் / காப்பாளினி பணியிடங்கள் காலியாகவுள்ளதால், அவ்விடுதிகளை சிறந்த முறையில் நிர்வகிப்பதில் சுணக்கம் ஏற்படும் சூழ்நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு மாவட்டங்களில் இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் விடுதிகளில் காலியாகவுள்ள பட்டதாரி காப்பாளர் / காப்பாளினி மற்றும் இடைநிலை காப்பாளர் / காப்பாளினி பணியிடங்களில் பணிபுரிய பள்ளிக் கல்வித் துறையின்கீழ் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் / ஆசிரியைகள் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் நிரப்புவதற்கு ஆவண செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

**அதனடிப்படையில், தங்கள் மாவட்டங்களில் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின்கீழ் செயல்படும் விடுதிகளில் காலியாகவுள்ள காப்பாளர் / காப்பாளினி பணியிடங்களில் பணியாற்ற விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

[த.பி.பா.]

www.Padasalai.Net

மேற்படி பணியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் பின்வருமாறு:

| வ.எண் | பணி விவரம் | கல்வித் தகுதி |
|---|---|---|
| 1 | இடைநிலை காப்பாளர் / காப்பாளினி | இடைநிலை ஆசிரியர் பட்டயப் படிப்பு (D.T.Ed.) |
| 2 | போதக காப்பாளர் / காப்பாளினி | இளங்கலைக் கல்வியியல் (B.Ed. with any degree) |

எனவே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின்கீழ் செயல்படும் விடுதிகளில் காலியாகவுள்ள 497 காப்பாளர் / காப்பாளினி பணியிடங்களுக்குச் செல்ல விருப்பமுள்ள பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர்களிடமிருந்து பள்ளிக் கல்வித் துறையிலிருந்து தடையின்மைச் சான்று பெற கருத்துருக்களைப் பெற்று உடன் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், எவரும் விருப்பம் தெரிவிக்கவில்லையெனில், இன்மை அறிக்கையினை பணிந்தனுப்புமாறும் தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு- விருப்பப் படிவம்**

11/11/24

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

11/11/2024

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

1. ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை-05 (பணிந்தனுப்பப்படுகிறது)
2. இவ்வியக்கக சி2 மற்றும் சி5 பிரிவு

www.Padasalai.Net

## இணைப்பு –2

| துறை மாறுதல் கோரும் ஆசிரியர் தொடர்பான விவரம் | | |
|---|---|---|
| 1 | துறை மாறுதல் கோரும் ஆசிரியரின் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் பதவி (S.G.T / B.T.) | |
| 2 | பிறந்த தேதி, தனியர் தற்போது பணிபுரிந்துவரும் பள்ளியின் பெயர், ஊர், வட்டம் மற்றும் மாவட்டம். | |
| 3 | பணியில் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை (வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமை மூலமாகவா? தேர்வு வாரியத்தின் மூலமாகவா? கருணை அடிப்படையிலா?) | |
| 4 | தனியர் ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தேர்ச்சி பெற்றுள்ளாரா? ஆம்/இல்லை. ஆம் எனில் அதன் விவரம். | |
| 5 | தனியர் முதன்முதலில் பணியில் சேர்ந்த போது வகித்த<br>1.பதவின் பெயர்<br>2.பணியில் சேர்ந்த நாள்<br>3.ஊதிய விவரம் | |
| 6 | தனியரின் கல்வித் தகுதி விவரங்கள் | |
| 7 | பதவி உயர்வு பெற்றிருப்பின் அதன் விவரம் மற்றும் ஊதிய உயர்வு விவரம் | |
| 8 | பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் | |
| 9 | தகுதிகான் பருவத்தினரா (அ) தகுதிகான் பருவம் முடிக்கப்பெற்றவரா? தகுதிகாண் பருவம் நிறைவு செய்த நாள் | |
| 10 | துறை மாறுதலில் பணியிடம் கோரும் மாவட்டம் | 1.)<br>2.)<br>3.) |
| 11 | துறை மாறுதல் கோருவதற்கான காரணம் | |
| 12 | துறைமாறுதல் பயணப்படி (TTA) இழக்க சம்மதிக்கிறாரா? | |
| 13 | தேர்வு நிலையில் ஊதிய உயர்வு பெற்ற விவரம் | |
| 14 | சிறப்பு நிலையில் ஊதிய உயர்வு பெற்ற விவரம் | |
| 15 | வயது முதிர்வின் காரணமாக தனியர் ஓய்வு பெறும் நாள் | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 16 | தனியர் இதுவரை பணிபுரிந்த காலம் (கருத்துரு அனுப்பப்படும் நாள் வரை கணக்கிட வேண்டும்) | |
| 17 | தனியர் தற்போது பணிபுரியும் பதவியின் அடிப்படை ஊதிய விவரம் மற்றும் தற்போது பெறும் ஊதிய விவரம் | |
| 18 | தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை குற்றச்சாட்டுக்கள் ஏதும் நிலுவையில் உள்ளதா? | |
| 19 | தனியர் மீது பணிசார்ந்த வழக்குகள் மற்றும் குற்றவியல் சார்ந்த வழக்குகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா? | |
| 20 | தனியர் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிடித்தம் செய்ய வேண்டியத் தொகை ஏதேனும் நிலுவையில் உள்ளதா? | |
| 21 | துறைமாறுதலில் செல்லும் மாவட்டத்தில் பணியிடம் காலியாகவுள்ள எந்த விடுதியிலும் பணிபுரிய தனியர் சம்மதிக்கிறாரா? | |
| 22 | தனியர் துறைமாறுதலில் செல்லும் மாவட்டத்தில் பணிமூப்பில் இறுதியாக வைப்பதற்கு சம்மதிக்கிறாரா? | |
| 23 | மேலே குறிப்பிட்ட தகவல்களைத் தவிர வேறு ஏதாவது தகவல்கள் இருப்பின் அவைகளை குறிப்பிடுக. | |
| 24 | பணிநியமன அலுவலரின் குறிப்பான பரிந்துரை | |

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்
______ மாவட்டம்

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக
24/09/2024

23.09.2024